88
1 0 AUG 1945
28

Registered No. M. 4018.

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்ந்த தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 7 | ~~July~~ August 1945 | No. 8

விஷய சூசிகை. பக்கம்

யோகரத்நாகரம் 37—44

கிராஜுவேஷன் வைத்யமண்டலம்

போட்டி வியாசம்

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள்நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
" " ½-க்கு ரூ 4
" " ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher

5, West Masi Street, Madura.

காஷைட்] [விலை 0—3—0

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—45.

3L
L.5.5002/11/125vL
M45718
210248.

# தமிழ் ஹோமியோபதிக்காலேஜ்

## கிழக்குப் பட்டக்காரர் தோட்டம், ஈரோடு.

**ஸ்தாபிதம் (1937ஆம்)**

புதியவருப்பு இத்தமாதம் ஆரம்பம். இவ்வருப்பில் சேரும் ஆயுர்வேத சித்தவைத்தியர்களுக்கு குறைந்த கட்டணவிதிப்படி ஹோமியோபதி, பயோகெமிஸ்ட்ரி வைத்தியக்கோ (ஹோமியோபதி இஞ்செக்ஷனுடன்) **தமிழில் தபால்** மூலமாய்க் கற்றுக்கொடுக்கப்படும். இது ஓர் அரிய சந்தர்ப்பம். யாவரும் இவ்வைத்தியத்தையும் தங்கள் ஓய்வு நேரங்களில் கற்றுக்கொள்ளலாம்.

ஸ்பெஷல் விண்ணப்ப பாரத்திற்கு 2 அணா ஸ்டாம் புடன் உடனே எழுதுக.

பிரின்ஸிபால்.


---


# புனர் சக்தி (காயகல்பம்)

## சந்ததமும் இளமையோடிருக்கலாம்.

தங்கபற்பம், சித்த மகரத்துவஜம், முத்து, வெள்ளி, அயிரம் புடம் போட்ட சுப்பிரக, அப்ர செந்தூரங்கள் இன்னும் இதர **காயகல்ப** லோகங்களும் 101 ஹிமாலய மூலிகைகளும் சேர்ந்தது.

**ஆண், பெண்**, யாவரும் சாப்பிடலாம்.

**இரத்த சுத்தி, இரத்த விருத்தி, அழகு, வீர்யபலம்** தேகபலம், மனோபலம், இந்திரியக்கட்டு, சுறுசுறுப்பு, ஞாபகசக்தி, ஆரோக்கியம் உண்டாகும்.

கூர்யம், தீர்க்கிவு, பகுத்தறிவாதம், ஆஸ்த்மா முதலிய சகல வியாதிகளையும் சொஸ்தம் செய்யும்.

கண்களுக்குக் கூரிய பார்வை சக்தி உண்டாகும்.

தேகக்கட்டுமை இளமையும் குறையாமலிருக்கும். தேகம், வச்சிரகாயமாகும்.

உண்மையில் இது தெய்வத்தன்மையுள்ள ஓர் வசப் பிரசாதம், **இரத்தவிருத்திக்கு சிறந்த டானிக்.**

**40 மாத்திரைகள் ரூ 5—0—0**

**சித்தா ரிசர்ச் லெபரடரி,**

கிழக்குப்பட்டக்காரர் தோட்டம், ஈரோடு S. I. Ry.

1 OAUG 1945

ஜ்வரம்

கிருமிபூஜை, ஆகிய இவை பரிஹாரங்களாம்: பூதாபிஷங்கஜ்வரங்களில் பூதஜித்தையில் சொல்லப்பட்ட பந்தம், ஆவேசம், தாடனம், மூசலிய மந்திரசாந்தி பரசித்தங்களான கர்மாக்களால் சிகித்சை செய்யவேண்டும். மானஜ்வரங்களில் மனதை சாந்தப்படுத்தி சிகித்சைசெய்யவேண்டும். மதூகஜ்வராதி—இலுப்பைவரம், மிளகு, இந்தப்பு. திப்பிலி, வசம்பு, ஆகிய இவைகளால் நல்லம் செய்ய பூதஜ்வரங்களில் அதிக தெளிவடையும். ஆபிகாதஜ்வரங்களில் உஷ்ணமில்லாத சிகித்சை செய்யவேண்டும், மதுரமாயும், ஸ்நிக்தமான கஷாயங்களை உசிதப்படி கொடுக்கவேண்டும், கிருதபானத்தாலும், ஸ்நாயங்கத்தாலும், மூலைக்கு பலம் கொடுக்கும் லஸ்துக்களாலும், சரீரத்திற்கேற்ற ஆகாரங்களாலும், மாம்சரஸம் முதலியவைகளாலும் சிகித்சை செய்யவேண்டும். சாவு, ஜுரவிலாஸம், சனகரசம் முதலியவை, ஆகிய இவைகளால் உண்டாகும் ஜ்வரங்களை சாராயம், பால், இவைகளை முதலில் உபயோகிக்கவேண்டும், மூலிகை காற்றம் ஸ்நம், இவைகளால உண்டாகும் ஜ்வரங்களில் விஷஹரமாயும் பித்தஹரமாயுமுள்ள கஷாயங்களால் சிகித்சைசெய்யவேண்டும், கருவாப்பட்டை, ஏலம், பச்சிலை, சிறுகாகப்பூ, பச்சைக்கர்ப்பூரம், வால்மிளகு, அகரு, குங்குமப்பூ, சாம்பு, ஆக இந்த ஒன்பது திரவியங்களுக்கு "ஸர்வகந்தம்" எனப்பெயர், இந்த ஸர்வகந்தங்களால் தயார்செய்யப்பட்ட கஷாயங்களை உபயோகிக்கவேண்டும். கோபஜ்வரத்தில் பித்தஹரமான சிகித்சையும் காமவெறியால் உண்டாகும் ஜ்வரங்களில நல்லவார்த்தைகளாலும் ஸ்நிக்தசாந்தத்தாலும் சிகித்சைசெய்யவேண்டும். காமம், சோகம், பயம், இவைகளால் உண்டாகும் ஜ்வரங்கள் சமாதானத்தாலும், தேவையைப் பூர்த்திசெய்வதாலும, சமத்தையடைகின்றன. பயத்தால் உண்டாகும் ஜ்வரத்தில்கோயாளியை ஜலத்தில் வைப்பதுடன் புலிபோல சித்திரம் வரைந்து அதைக் கொன்றுவிடுவதாக பாவனைசெய்து கோயாளியைத் தேற்றவேண்டும். காமத்தை உண்டுபண்ணி கோபஜ்வரத்தையும். கோபத்தை யுண்டுபண்ணி காமஜ்வரத்தையும், காமகோபங்களை உண்டுபண்ணி பயஜ்வரத்தையும் கோபஜ்வரத்தையும் சமனம் செய்யவேண்டும். இனி விஷஜ்வரங்கள் சொல்லப்படுகின்றன.

2102 48

முதல் மூறைக்காய்ச்சல் என சொல்லப்படுபவைகளே விஷமஜ்வரங்களாகும். இவற்றின் காரணம்—ஜ்வரங்களே யுண்டுபண்ணும் தோஷங்கள் அல்பங்களாக விருந்தால் அப்பொழுது முறைக்காய்ச்சலாது உண்டாகின்றன, அல்லது ஜ்வரம்வந்து நின்றபிறகு மீதியிருக்கும் அல்பமான தோஷத்தாலும் முறைக்காய்ச்சல்கள் உண்டாகலாம். இந்த தோஷம் ரஸாதி தாதுக்களில் ஏதாவது ஒன்றைப்பற்றியுண்டாகும், இக்காய்ச்சல்கள் குளிர்வந்து பிறகு வரும். அல்லது குளிர் இல்லாமலும் வருவதுண்டு வியாதியின்றவுடன் உடம்பு மெலிந்திருக்கும் நோயாளி பத்யம் முதலியவைகளைச் சரியாக கவனித்து நடத்தாமல் இருந்தால் அப்பொழுது தோஷம் அல்பமாக விருந்தாலும் விஷமஜ்வரங்களே யுண்டுபண்ணும். விஷமஜ்வரங்களே யுண்டுபண்ணும் தோஷங்களுக்கு சரீரத்தில் எதிரி உண்டு, ஏகாஹிகம், த்வியாஹிகம், த்ரியாஹிகம், சாதுர்த்தகம், ஜீர்ணஜ்வரம் என விஷமஜ்வரங்கள் ஐந்துவிதங்களாகின்றன. குறிப்பு—விஷமஜ்வரங்கள் ஐந்து என்பதில் "ஸந்ததம்" என்ற ஜ்வரத்தைச் சேர்த்தும் ஜீர்ணஜ்வரத்தைக் கழித்தும் ஐந்து என்பது பலருடையமதம். ஸந்ததம் என்பதை விஷமஜ்வரங்களில் சேர்க்கக்கூடாது என்பது சிலருடையமதம். இதைப்பற்றி பிறகு விவரிக்கப்படும். விஷஜ்வரங்கள் நோயாளியை வெகுகாள் பாதிக்கும். விஷமஜ்வரங்களின் சிகித்சை இனி சொல்லப்படுகிறது. வாதம் மிகுந்த விஷமஜ்வரங்களில் கிருதங்கள், பஞ்சி, அனுவாஸனம் ஆகிய இவைகளால் சிகித்சை செய்யவேண்டும். ஸ்நிக்தமாயும் உஷ்ணமாயுமுள்ள அன்னபானங்களே உபயோகிக்கவேண்டும். பித்தாதிகமான விஷமஜ்வரங்களில் விரேசனம், பால், கிருதம் சுக்ஷ்ம த்ரவியங்கள், சீதகிரவியங்கள், ஆகிய இவைகளே உபயோகிக்கவேண்டும். கபாதிகமான விஷமஜ்வரங்களில் வமனம், பாசனம், ரூக்ஷமான அன்னபானங்கள், உபவாஸம், துளர்ப்பு திரவியங்கள், உஷ்ணதிரவியங்கள், ஆகியவை நன்மைசெய்யும். ஸந்ததஜ்வர சிகித்சை—(குறிப்பு—ஸந்ததஜ்வரமென்பதே "ஸதாஹிக" ஜ்வரமாகும்) தாராயந்தியாதி—மருக்கொன்னை, கடுகுரோகிணி, நன்னீரி, மாகாளிகீழ்வர், இவைகளின் கஷாயத்தைச் சர்ப்பிடமும், கஷாயங்களில் விடப்படும் தேனுக்கும் சர்க்கரைக்கும் அளவு சொல்லப்படு

கிறது. வாதாதிக கோய்களில் 16-ல் ஒருபங்கு தேனும், பித்தாதிக கோய்களில் எட்டில் ஒருபங்கு தேனும், கபாதிக கோய்களில் கான்கில் ஒருபங்கு தேனும் வாதாதிக கோய்களில் கான்கில் ஒருபங்கு சர்க்கரையும், பித்தாதிக கோய்களில் எட்டில் ஒருபங்கு சர்க்கரையும் கபாதிக கோய்களில் 16ல் ஒருபங்கு சர்க்கரையும் சேர்க்கவேண்டும். குறிப்பு—தேன், சர்க்கரை, இவைகளின் அளவு நூல்களில் இவ்விதம் காணப்பட்டாலும் வைத்திய சம்பிரதாயத்தில் 5, 6, துளி தேனும், சுமார் கால்தோலா சர்க்கரையுமே கஷாயங்களில் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றது. வாஸா தி—ஆடாதோடை, பேய்புடல், திரிபலை, திராக்ஷை, சரக்கொன்னை. வேப்பம்பட்டை, இவைகளின் கஷாயத்தில் தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிடவேண்டும். கோட்டான் என்ற ஜந்துவினுடைய வலதுபக்கம் இறகை எடுத்து நோயாளியின் இடதுகரத்தில் வெளுப்பு நூலால் கட்ட ஸந்தஜ்வரம் விலகும். த்விபாஹிகஜ்வர சிகித்ஸை—திராக்ஷாதி—திராக்ஷை, பேய்புடல், வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, வெப்பாலையரிசி, திரிபலை, சிந்தில், விலாமிச்சவேர், இவைகளை சதகஷாயம் செய்து சாப்பிடவும், திருதீயகஜ்வர சிகித்ஸை—விலாமிசவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, சக்தனம், திப்பிலி, கோரைக்கிழங்கு, இவைகளின் கஷாயத்தில் தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும்; சிலர் தைக் கூட்டின் நூலை மைசெய்து கண்களில் அஞ்ஜனம்செய்ய திருதீயகஜ்வரம் விலகும், திருதீயகஜ்வரம என்பது மூன்றாம் முறைக்காய்ச்சல், சாதர்த்தகம் (நாலாம் முறைக்காய்ச்சல்) சிகித்ஸை—வாஸாதி—ஆடாதோடை, நெல்லிவற்றல், ஓரிலை, தேவதாரு, மல்லிவிரை, சுக்கு, இவைகளின கஷாயத்தில் தேன் சர்க்கரை சேர்த்துச்சாப்பிடவும். பதயாதி—கடுக்காய், ஓரிலை, சுக்கு, தேவதாரு, நெல்லிவற்றல், ஆடாதோடை, இவைகளின் கஷாயத்தில் தேன் சர்க்கரை சேர்த்து சாப்பிடவும். ஹஸ்யம்—பழைய நெய்யுடன் பெருங்காயம் சேர்த்து ஹஸ்யம்செய்ய நாலாம் முறைக்காய்ச்சல் விலகும். மற்றஹஸ்யம்—அகத்தியிலை ரசத்தால் ஹஸ்யம் செய்யவும். மற்றஹஸ்யம்—வாகைப்பூ, மஞ்சள், மரமஞ்சள், இவைகளை அரைத்து கல்கம் செய்து அதில் நெய்சேர்த்து ஹஸ்யம்செய்ய முன்சொன்னமுண்டாம். "தேவி" என்ற மூலிகையை வஸ்திரமினறி நிர்வாணமாக வீருக்கு காதில் கட்டிக்

கொள்ள முன்குணமுண்டாம். காயுருவியின் வேரைகன்னிகையைக் கொண்டு கொளர்ந்து ஞாயற்றுக்கிழமையில் கட்டிக்கொள்ள முன்குணமுண்டாம் காகஜங்கா (இது வடதேசத்தில் கிடைக்கின்றது) குருந்தொட்டி, விருத்ததாரகர், கரிப்பான், நாயுருவி, இவைகளில் எதாவது ஒன்றைக்கட்டிக்கொள்ள முன்குணமுண்டாம். குக்கில், கோட்டான் இறகு, இவைகளை கருப்புவஸ்திரத்தில் கன்முசக்கட்டி தூபம்போட காலாம் முறைக்காய்ச்சல் விலகும். குமரிவேர், ஓர் தோலா எடுத்து அரைத்து வெள்ளரியில் கலக்கிச்சாப்பிட வாந்தியாகும். விஷமஜ்வரங்கள் போம். கடுக்காய் பொடியைத் தேனில் குழைத்துச்சாப்பிட விஷமஜ்வரங்கள் போம், வர்த்தமானிப்பலி சாப்பிட விஷமஜ்வரங்கள் போம். ஜீரகத்துடன் வெல்லம் சேர்த்துச்சாப்பிட விஷமஜ்வரங்கள் போம். திரிபலையை வெல்லத்துடன் சாப்பிட விஷமஜ்வரங்கள் போம். இனி வர்த்தமானிப்பலி முறை சொல்லப்படுகிறது. 3, 5, 7, 10 என்று தினப்படி திப்பிலிகளை அதிகப்படுத்திச்சாப்பிட்டு பால் அனுபானமாகக் கொள்ளவும். அதாவது முதல்நாள் நோயாளியின் பலத்திற்குத் தக்கபடி 3, 5, 7 அல்லது 10 திப்பிலிகளை கணக்காக எடுத்து பால் விட்டு அரைத்துப்பால் அனுபானத்தில் சாப்பிடவும், முதல்நாள் மூன்று எடுத்துக்கொண்டால் மறுநாள் அதற்கு இரண்டுபங்கு அதாவது ஆறு திப்பிலிகளை எடுத்து முன்போல செய்யவேண்டும் மூன்றுவதுநாள் மூன்றுபங்கு அதாவது ஒன்பது திப்பிலி, நான்காவதுநாள் நான்குமடங்கு அதாவது 12 திப்பிலிகள், ஐந்தாவதுநாள், 15 திப்பிலிகள், ஆறுவதுநாள் 18 திப்பிலிகள், ஏழாவதுநாள் 21 திப்பிலிகள், எட்டாவதுநாள் 24 திப்பிலிகள், ஒன்பதாவதுநாள் 27 திப்பிலிகள், பத்தாவதுநாள் 30 திப்பிலிகள் என்று இவ்விதம் பத்து நாள் உயர்த்திக்கொண்டே போய் பிறகு 11-வதுநாள்முதல் மும்மூன்றாகக் குறைத்துக்கொண்டுவரவேண்டும். அதாவது 11-வது நாள் 27, 12-வது நாள் 24, 13-வது நாள் 21, 14-வது நாள் 18, 15-வது நாள் 15, 16-வது நாள் 12, 17-வது நாள் 9, 18-வது நாள் 6, 20-வது நாள் 3 என்று திப்பிலிகளை எடுத்து முன்போல உபயோகிக்கவேண்டும், பாலும் சாதமும் பத்தியம், மற்றவை கூடாது. 5, 7, 10 என்ற முறைகளிலும் இவ்விதம் முதல் பத்துநாள் கூட்ட

வும். பின் பத்துக்காள் 5, 7, 10 என்று குறைத்துக்கொண்டும் வர வேண்டும். குறிப்பு–வர்த்தமான பிப்பலி என்ற முறை அனுபவத்தில் உயர்ந்த மருந்தாகக் காணப்படுகிறது. ஆனால் சில சரீரங்களில் திப்பிலிவேகம் தாங்காமல் காய்ச்சல் உண்டாகின்றது. கடுப்பு முகியவை சிலருக்குக் காணுகின்றது. அவ்விதம் நேர்ந்தால் மருந்தை நிறுத்தி உடனே சீத சிகித்சை செய்யவேண்டும். 5, 7, 10 என்ற கணக்கு நூல்களில் காணப்பட்டாலும் அந்த வழியைப் பின்பற்றினால் தீங்கு நேரிடும். மூன்று என்ற முறையே இக்காலத்திற்கேற்றது. அரிசித்திப்பிலியை எடுத்துக்கொள்ளவேண்டும். முழுத்திப்பிலியாக எடுத்து கணக்கிடவேண்டும். நாம் வர்த்தமான பிப்பலியை உபயோகிக்கும்போது ஓர் நோயாளிக்கு காய்ச்சலும் ரக்தாதிசாரமும் கண்டது. மருந்தை உடனே நிறுத்தி சகசாவை அரைத்துப் பால்பிழிந்து தினம் இரண்டுவேளை கொடுத்துவந்ததில் 2, 3 நாள்களில் காய்ச்சலும் ரக்தப்போக்கும் நின்றது. ஆகவே இம்முறையை வெகு ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். ஸர்பிராதி—நெய், தேன், காய்ச்சினபால், திப்பிலி, சர்க்கரை, இவைகளோச்சமையடை எடுத்து நன்றாகக்கலக்கு சாப்பிடவும். இதற்கு "பஞ்சாமம்" எனப்பெயர். விஷமஜ்வரங்கள், ஹிருத்தோகம், சுவாசம், காஸம், க்ஷயம், இவைகளைப்போக்கும். ஜீர்ணஜ்வர சிகித்சை—நிதிக்ஷாதி—கண்டங்கத்திரி, சக்கு, சித்தில், இவைகளைக்கஷாயம் செய்து அதில் திப்பிலிப்பொடி சேர்த்துச்சாப்பிட்டவும். ஜீர்ணஜ்வரம் அதிசாரம், காஸம், சூலம், சுவாஸம், அக்னிமாந்தம், முகவாதம், பீனசம், ஆகிய இவைகளுக்கு பரிடாலபஞ்சகம்—பேப்புடல், அதிமதுரம், கடுகுரோஹிணி, கோரைக்கிழங்கு, கடுக்காய், இவைகளின் கஷாயம் சாப்பிட ஜீர்ணஜ்வரம் போம். திரிபலாதித்யம்——திரிபல, சீந்தில், ஆடாதோடை. இவைகளின் கஷாயம் சாப்பிட முன்குணமுண்டாம், அல்லது திரிபல கஷாயம், சீந்தில் கஷாயம், ஆடாதோடை கஷாயம், தனித்தனி இந்த மூன்றும் ஜீர்ணஜ்வரத்தில் நன்மைசெய்யும். நிராக்ஷாதி—நிராக்ஷை, கிராம்பு, சுக்கு, கருவாப்பட்டை, மல்லிவித்தை, கடுக்காய், சதகுப்பை, கோரைக்கிழங்கு சீந்தில், புங்கம்பட்டை. இவைகளின் கஷாயம் வாதஜ்வரத்தைப் போக்கும், பாசனம், தீபனம், லகுகுணமுள்ளது. இதற்குப்

இ10248

சரக்குகளின் கஷாயம் சகல ஜ்வரங்களையும் போக்கும். வேறு நூல் கூறுவதாவது—சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, பர்பாடகம், சிறுகாஞ்சொரி, சுக்கு, நிலவேம்பு, கோஷ்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சீந்தில், இவைகளின் கஷாயம் ஸப்த விஷமஜ்வரங்களையும் போக்கும். வேறு பார்கியாதி—சிறுதேக்கு, பர்பாடகம், சுக்கு, ஆடாதோடை, திப்பிலி, நிலவேம்பு, வேப்பம்பட்டை, சீந்தில், கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொரி, ஆகிய இவைகளின் கஷாயம் இரண்டுகால் உட்கொண்டால் சகலஜ்வரங்களையும் போக்கும். அமிருதாதி—சீந்தில், கடுக்காய், சுக்கு, கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரி, இவைகளின் கஷாயத்தில் தேன், திப்பிலிப்பொடி சேர்த்து சாப்பிட விஷமஜ்வரங்களனைத்தும் போம். அமிருதாதி—சீந்தில், கோரைக்கிழங்கு, கடுக்காய், இவைகளைக் கஷாயம் செய்து அதில் தேன்சேர்த்துச்சாப்பிட விஷமஜ்வரங்களனைத்தும் போம். திரிகஷாதி—நிராகஷ, சீந்தில், சுக்கு, விலாமிச்சவேர், திப்பிலி, கோஷ்டம், இவைகளின் கஷாயம் சாப்பிட சகல விஷமஜ்வரங்களும், காளம், சுவாளம், ஆகிய இவையும் போம். தன்பர்சாதி—சிறுகாஞ்சொரி, விலாமிச்சவேர், கண்டங்கத்திரி, கோரைகிழங்கு அதிமதுரம், கடுக்காய், ஜீரகம், சுக்கு, ஆடாதோடை, சீந்தில், ஆமோஷகம், இவைகளின் கஷாயத்தில் எட்டில் ஒருபங்கு தேனும் திப்பிலிப்பொடியும் சேர்த்துச்சாப்பிட சகல விஷமஜ்வரங்களும் போம். ஸரிச்சல், ஸிபாவை, சோஷம், சைத்யம், ரக்தம், மூலரக்கோளாறு, சுவாளம், சூலம், காசம், ஸ்தம்பம் ஸ்திமிதகமரணம் விஷஜ்வரங்கள் ஆகிய இவை போம். முஸ்தாதி—கோரைக்கிழங்கு, நெல்லிவற்றல், சீந்தில், சுக்கு, கோஷ்டம், கண்டங்கத்திரி, இவைகளின் கஷாயத்தில் திப்பிலிப்பொடி தேன்சேர்த்துச்சாப்பிட விஷமஜ்வரங்கள் போம். தார்வியாதி—மாமஞ்சள், தேவதாரு, வெட்பாலையரிசி, மருந்திஷ்டி, சரக்கொன்னை, மஹாதாக்கிவேர், பூலாங்கிழங்கு, அரேணுகம், சுக்கு, நிலவேம்பு, பாரீனத்திப்பிலி, மருர்தெகான்னி, பத்மகாஷ்டம், வசம்பு, மல்லிவிதை, சுக்கு, கோரைக்கிழங்கு, தேவதாரு, முருகைப்பட்டை, கருவாப்பட்டை, விலாமிச்சவேர், கண்டங்கத்திரி, பர்பாடகர், திர்ப்பவேர், கடுகுரோஹிணி, நன்னாரி, சீந்தில், சாதாகோஷ்டம், ஆகிய இவைகளின

கஷாயம் சகல விஷமஜ்வரங்களையும் போக்கும். இந்த முறை "ஆரோக்யதர்பணம்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. குறிப்பு— இம்முறையிலும் மற்ற முறைகளிலும் ஒரே சரக்கு இரண்டுகடவை சொல்லப்படுமாகில் இடண்டுமடங்கு அந்த சரக்கை எடுத்துக் கொள்ளவண்டும், சிருங்கியாதி— கடுக்காய்ப்பூ, பெருங்காயம், துளசி, மஞ்சள், கோஷ்டம், அசோணுகம், கடுகுரோகிணி, அரத்தை, ஆமணக்குவேர், உள்ளிப்பூண்டு, மாமஞ்சள், சரக்கொன்னை, மருக்காளங்காய், மருக்கொன்னை, சிவதை, கொடுவேலி, முத்தக்காசு, (இது கிடைக்காவிட்டால் கோரைக்கிழங்கை எடுத்துகொள்ளவும்) நன்னாரி, சீந்தில், முத்ரிதா (இது அச்சுப்பிழை விளங்கவில்லை) கோவாளவேர், தும்புரு, கொம்மட்டிவேர், ஏலம், கருவாப்பட்டை, கடுகுரோகிணி, கடுகு, ஆடாதோடை, வெப்பாலையரிசி, பேய்க்கொம்மட்டிவேர், குருந்தொட்டி, சதாவரி, மிளகு, பிரம்மி, மஞ்சிஷ்டி, யானைத்திப்பிலி, சுக்கு, கடுக்காய், ஆடாதோடை, மருள், வேர், மல்லிவேர, தேசாவரம், திப்பிலி, கோரைக்கிழங்கு, ஓமம், காட்டு ஓமம், சதகுப்பை, அகில், சந்தனம், கர்ப்பூரம், செவ்வியம், வெப்பாலைப்பட்டை, வசம்பு, கட்பலம், தசமூலம், ஆக 64 சரக்குகளால் தயாரிக்கப்பட்ட கஷாயத்தைச் சாப்பிட சகல விஷஜ்வரங்களும் தணியும். சஷ்டாதி— கண்டங்கத்திரி, சுக்கு, கோலைக்கிழங்கு, கிலவேம்பு, வேப்பம்பட்டை, சீந்தில், சிறுதேக்கு, சந்தனம், சாதாகோஷ்டம், பேய்ப்புடல், கடுகுரோகிணி, ஆடாதோடை, பத்மகாஷ்டம், வெப்பாலையரிசி. ஆகிய இவைகளின் கஷாயம் சகல விஷமஜ்வரங்களையும் போக்கும். சக்ராதி— வெப்பாலையரிசி, தக்கவேர், வத்ஸநாபி (இது அச்சுபிழை, ஆகையால் இக்கஷாயத்தில் வத்சநாபியை விலக்கிவிடவேண்டும்) சீந்தில், நொச்சி, கரிப்பான், சுக்கு, கண்டங்கத்திரி, ஓமம், ஆகிய இவைகளின் கஷாயம் முன்குணமுள்ளது. உள்ளிப்பூண்டை தோல்நீக்கி அதைத்தோலாமுதல் ஒரு தேசலாவரை எடுத்து அதைத்து அந்த விழுதை நல்லெண்ணை, அல்லது நெய்யில்சேர்த்துச் சாப்பிடவும். ஜீவரங்கள் போம். உள்ளிப்பூண்டை முன்போல எடுத்து சரியெடை கருப்பு எள்ளுப்பொடி சேர்த்துச் சாப்பிட முன்குணமுண்டாம். ராஸ்நாதி— அரத்தை, சுக்கு, திப்பிலி, இவைகளோச் சமயெடை எடுத்து

வெண்ணீர்விட்டரைத்த அந்த கல்கத்தைச் சுடுநீரில் கலக்கிச்சாப் பிட முன்குணமுண்டாம். காலம், சுவாலர், அக்னிமந்தம், குளிர் ஜ்வரம், ஆகிய இவை போம். ஜீரகாதி—ஜீரகம், உள்ளிப்பூண்டு, திரிகடி, மல்லிதாக்கிவேர், இவைகளைச்சமயெடை எடுத்துஇவைகளை அரைத்து வெல்லம்சேர்த்து குளிர்ஜ்வரம் வருவதற்குச் சற்றுமுன் வெண்ணீரில் கலக்கிச்சாப்பிடவும், துளசிச்சார் எடுத்து அதில் கால் தோலா மிளகுபொடிசேர்த்துச்சாப்பிடவிஷமஜ்வரம்போம். துளசிச் சார் ஒரு அவுன்ச எடுத்து அதில்கால்தோலா மிளகுபொடிசேர்த்து ச்சாப்பிடவும். தும்பைச்சாற்றை எடுத்து மிளகுபொடி சேர்த்து முன்போல சாப்பிட முன்குணமுண்டாம். குறிப்பு—இந்த இரண்டு முறைகளும் குளிர்காய்ச்சல்களில் நன்மைசெய்கின்றன. அஞ்ச னம்—மஞ்சள், நல்லெண்ணை, திப்பிலி, மிளகு, இந்துப்பு, இவை களை அரைத்துக்கண்களில் அஞ்சனம் போட முறைக்காய்ச்சல் களில் நன்மைசெய்யும். தூபம்—வசம்பு, கடுக்காய்தெய், இவை களால் புகைபோட முறைக்காய்ச்சல்களில் நன்மைசெய்யும். ஆட் டின்தோல், ஆட்டின்மயிர், வசம்பு, கோஷ்டம், அரக்கு, வேப்பம் இலை, தேன், இவைகளால் புகைபோட முன்குணமுண்டாம், சர்ப் பத்தின்தோல், கடுகு, பெருங்காயம், வேப்பம இலை, இவைகளால் புகைபோட பூதம், பிசாசு, டாகினி, முகலிபவைகளின் தொந்திரவு விலகுவதுடன் முன்குணமுண்டாம். அரக்கு, வேப்பம் இலை, வசம்பு, கோஷ்டம், கடுக்காய், கந்தி, யவம், தெல், இவைகளால் தூபம்போட முன்குணமுண்டாம். மாஹேஸ்வரதூபம்—பருத்தி விதை, மயில்தோகை, கண்டங்கத்திரி, மருக்காளக்காய், நிர்மால யம் (இது விளங்களிலலை) கருவாப்பட்டை, சடாமாஞ்சி, பூணமலை நகம், வசம்பு, மனிதாதலைமயிர், பாம்புச்சட்டை, யானைப்பல், தக்தம் பெருங்காயம், மிளகு, இவைகளைச் சமயெடை எடுத்துப்பொடி செய்து புகைபோட பலவித பிசாசு தொந்திரவுகள் நீங்கும். இனி சகலஜ்வரங்களுக்கும் சூர்ணங்கள் சொல்லப்படுகின்றன— தான்யாதி—கொத்தமல்லி விதை, இரும்பு, திரிபலை, சுக்கு, இவை களைச்சமயெடை எடுத்துப் பொடிசெய்து அதில் ஒருதோலா பொடி யை வெண்ணீரில் கலக்கிச்சாப்பிட சருணஜ்வரங்கள் போம். இவை களையே கஷாயம்செய்து சாப்பிட அக்னிமந்தம், அஜீர்ணம், இவை போம். கோஷாதி—கோஷ்டம், மிளகு, அரத்தை, கோஷ் டம், திப்பிலி, இவைகளைச் சமயெடை எடுத்துப் பொடி செய்து அரைக்கால் தோலா முதல் கால்தோலா வரை சுடுநீரில் சாப்பிட

ஸ்ரீ தன்வந்தரயே நம

# திராவிட ஆயுர்வேத மண்டலம்

நிகிலபாரத ஆயுர்வேத மஹாமண்டலத்துடன் இணைக்கப்பெற்றது

கட்டுரைப்போட்டி பரிசு–தங்கப்பதக்கமும், வெள்ளிக்கோப்பையும்

1945 வருஷத்தில் கடைபெறப்போகும் திராவிட ஆயுர்வேத மண்டலத்தின் 13-வது வருஷத்திய மஹாநாட்டிலும், சென்ற வருஷத்தில் போல பாண்டுரோகத்தைப்பற்றி ஸம்ஸ்கிருதபாஷையில் சிறந்த கட்டுரையாளருக்கு தங்கப்பதக்கம் பரிசு அளிக்கப்படும், சென்ற மஹாநாட்டில் லாக்கலிக்கப்பட்டுள்ள வெள்ளிக் கோப்பைப்பரிசு, பிரமேஹத்தில் நியமப்படி பரிசு பெறுவதற்குரிய கட்டுரை இல்லாததால் அது அப்படியே காத்திருக்கிறது. அது இவ்வருஷ மஹாநாட்டில் தமிழ் பாஷையில் பிரமேஹ ரோகத்தில் சிறந்த கட்டுரையாளருக்கு ஸமர்ப்பிக்கப்படும்.

கட்டுரைகளுடைய பொதுவிதிகள்:—வைத்தியத்தொழில் பயிலுர், அல்லது வைத்தியபாடம் கற்பித்துக்கொண்டிருக்கும் எல்லா வைத்தியர்களுக்கும் கட்டுரைப்போட்டியில் கலக்துகொள்ள உரிமை உண்டு; மாணவருக்குமட்டுமில்லை. 1945 அக்டோபர் 15உக்குள் கட்டுரைகள் கீழ்கண்ட விலாசத்திற்கு ரிஜிஸ்டர் போஸ்டு மூலம் அனுப்பப்படவேண்டும். கட்டுரைக்காரரால் கட்டுரையில் தன் பெயர் எழுதப்படக்கூடாது. பெயரையும், விலாசத்தையும் தனிக்கடிதத்தில் எழுதிக் கட்டுரையுடன் கூட அனுப்பவேண்டும். கட்டுரையின் அளவு foolscap கடிதத்தில் சுமார் 15–20 பக்கங்கள் வரை எழுதப்பட்டும், சுமார் 1½-மணி நேரத்தில் படிக்கக்கூடியதாகவும் இருக்கத்தக்கது. கட்டுரைகள் ஆராய்ச்சியுடன் விமர்சம் செய்து ஆயுர்வேத முறைப்படி இருக்கவேண்டும். வியாதியின் காரணம், குறி, பரீக்ஷைக்ரமங்கள்; சிகித்ஸை முதலியவைகளில் சாஸ்திரங்களில் கூறியவைகளுடன் கேரில் கண்டவைகளையும் வியர்த்தக் கட்டவேண்டும். கமது முறைப்படி சிகிச்சை செய்யுங்கால் பாண்டு—பிரமேஹ நோய்களில் மேலநாட்டு வைத்தியமுறைப்படி செய்யப்படும் பரீக்ஷைகளினால் ஏதாகிலும் உபகாரம் ஏற்பட முடியுமா? முடியாதா? வென சுருக்கமாய் விளக்குவது கவம் தன்யனுபவத்தில் கைகண்டதும், தென்னாட்டில் விசேஷமாய் பிரசித்தி பெற்றதுமான மருந்து மூறைகள் யுக்தியுடன் விளக்கத்தக்கது. மஹாநாடு ஸபையில் சர்ச்சையில், அழைக்கப்படும் கட்டுரையாளர் கேரில் வந்து தாம் எழுதிய விஷயத்தில் ஸந்தேஹ

திராவிட ஆயுர்வேத மண்டலம்

வருக்கு பதில் எழுதக் கட்டுரையைப் படிக்கவேண்டும். கேரில் கட்டக்கூடிய பரீக்ஷாவிதிகளையும் ஸ்வாதுபூத ஔஷதங்களையும் காட்டிக்கொடுக்கவேண்டும். சாஸத்ரஜ்ஞானம், ப்ரத்யக்ஷஜ்ஞானம் இரண்டிலுமுள்ள வினாத்தியத்தைக் கவனித்தே பரீக்ஷைக்கு யோக்கியதாம்சம் உறுதி செய்யப்படும். பரீக்ஷைபெற்ற கட்டுரையை அச்சிட்டு வெளியிட திராவிட ஆயுர்வேதமண்டலத்திற்கே உரிமை உண்டு. கட்டுரைகளுடைய தனிப்பட்ட விதிகள் —தக்கப்பத்திற்குரிய பாணி விபாகியைப்பற்றிய கட்டுரையானது ஸம்ஸ்க்ருத பாஷையில் தேவநாகரலிபியில் எழுதப்படவேண்டும். ஸ்வதந்த்ரபாண்டு, ப்ரகாந்திபாண்டு பாண்டுரோக ஔபத்ரவங்கள் எல்லாவற்றுக்கும் ஹேது—லிங்க—ஔஷதங்கள் ஸங்கோபாங்கமாய் விவரிக்கப்படவேண்டும். வெள்ளிக்கோப்பைப் பரிசுக்குரிய ப்ரமேஹ ரோகத்தைப்பற்றிய கட்டுரையானது தமிழ் பாஷையில் எழுதப்படவேண்டும். பழைய நூல்களில் சொல்லப்பட்ட எல்லா விதப்ரிசமேஹங்களும் இப்போது அநுபவத்தில் தென்படுகின்றனவா என்று சருங்கமாய் விளக்கி, பழைய நூல்களில் கூறப்பட்ட கூறப்படாமல் இக்காலில் காண்கிற பூயமேஹம் (Gonrrhoea) உள்பட ஸகல ப்ரமேஹங்களுடையவும் காரணம், குறி, பரீக்ஷை சுருக்கு ஸைகிசங்கள் சுருக்கமாய் கூறப்படவேண்டும். மதுமேஹத்தைப் பற்றி ஸாங்கோபாங்கமாய் விஸ்தரித்து, தெளிவுட்டி விதகவைதிய ப்ரமாணப்ரகாரத்தில் சொல்லப்பட்ட விசேஷங்களையும் விளக்கி ஆராய்ச்சியுடன் எழுதவேண்டும். பிடகை முதலிய ப்ரமேஹ ஔபத்ரவங்களில் அதிக விவரம் அவசியமில்லை.

குறிப்பு:-ப்ரமேஹங்களைப்பற்றி தனி வித்தவைத்தியமுறை படியே ஸகல விஷயங்களையும் விளக்கிக் கட்டுரை எழுதப்படவேண்டும். பரிசு நிர்மாண விஷயத்தில் வித்தவைத்திய முறைப்படி எழுதப்பட்டதையும் ஸம அந்தஸ்திலேயே கவனிக்கப்படும். கட்டுரைகள் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். அவ்விடமிருந்தே கட்டுரைப்போட்டி ஸம்பந்தமான மேற்கொண்டு விஷயங்களை அறிந்துகொள்ளலாம்.

தங்களுக்குத் தெரிந்த ஸகல வைத்தியர்களுக்கும் இதை தெரிவித்து தெரிவிக்கவும்.

Pt. P. S. RAMASARMA,
*Secretary. Dravida Ayurveda Mandal*
KARUR ( Trichinopoly Dt.)

18—7—1945.